## விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(செப்டம்பர் 30-ம் தேதி முதல் அக்டோபர் 4-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (25.9.15– 28.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 20.3 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 37- 38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23- 24 |
| வானம் (ஆக்டா) | 5- 8 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 59- 76 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 42- 59 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 5- 18 |
| காற்றின் திசை | 110- 200 |

**4.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 30.9.15 | நாள் 2 1.10.15 | நாள் 3 2.10.15 | நாள் 4 3.10.15 | நாள் 5 4.10.15 |
| மழை (மி.மீ.) | 6 | 6 | 0 | 0 | 3 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 | 34 | 35 | 35 | 36 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25 | 25 | 25 | 25 | 26 |
| வானம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 58- 76 | 56- 74 | 54- 72 | 56- 74 | 54- 72 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 10/ தெற்கு | 10/ தெற்கு | 10/ தெற்கு | 10/ தெற்கு | 10/ தெற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி, சோளம், மக்காச்சோளம், பயறுவகைகள், மிளகாய், தக்காளி , | களைக்கொல்லி பரிந்துரை | மானாவாரி பயிர்களுக்கு களைக்கொல்லி இடும்போது சரியான அளவு களைக்கொல்லியை சரியான சமயத்தில் இடவும். சோளம், கம்பு மற்றும் மக்காச்சோளத்திற்கு அட்ரசின் 500 கிராம்/ எக்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம்), தக்காளி, வெண்டை மற்றும் மிளகாய்க்கு புளூகுளோரலின் 2.2 லிட்டர்/ எக்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4.4 மி.லி.), பயறுவகைகளுக்கு பென்டிமெத்தலின் 2 லிட்டர்/ எக்டர் (ஒரு |

| | | |
|---|---|---|
| வெண்டை | | லிட்டர் தண்ணீருக்கு 4 மி.லி.) மற்றும் பருத்திக்கு பென்டிமெத்தலின் 3.3 லிட்டர்/ எக்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 6.6 மி.லி.) என்ற அளவில் எக்டருக்கு 500 லிட்டர் தண்ணீரை பயன்படுத்தி தெளிக்கவும். |
| | களைக்கொல்லி இடும் காலம் | மானாவாரி பயிர்களுக்கு களைக்கொல்லியை மண் நன்கு நனையும்படி மழை கிடைத்த மூன்றாம் நாள் மண்ணில் போதிய அளவு ஈரம் இருக்கும்போது தெளிக்கவும். |
| | தெளிப்பானை தேர்வு செய்தல் | களைக்கொல்லி அடிப்பதற்கென்று தனியாக ஒரு தெளிப்பானை வைத்துக்கொள்ளவும். விசிறி அல்லது டிஃப்ளக்டார் நாசில் பொருத்தப்பட்ட கைத்தெளிப்பானை மட்டும் பயன்படுத்தவும். |
| | களைக்கொல்லி தெளிக்கும் முறை | களைக்கொல்லியை அடிப்பதற்கு முன்பு ஒரு குறிப்பிட்ட பரப்பளவில் தண்ணீரை தெளித்து ஒரு எக்டருக்கு தேவையான தண்ணீரின் அளவை கண்டறியவும். களைக்கொல்லி அடிப்பதற்கு உப்பு தண்ணீரை பயன்படுத்தினால் மருந்தின் வீரியம் குறையும். எனவே நல்ல தண்ணீரை பயன்படுத்தவும். தெளிப்பானில் களைக்கொல்லியை நேரடியாக ஊற்றாமல் பிளாஸ்டிக் பக்கெட்டில் தேவையான அளவு நீருடன் களைக்கொல்லியை கலந்து பின்பு தெளிப்பானில் நிரப்பவும். களைக்கொல்லியை காற்று இல்லாத சமயத்தில் பின்னோக்கி நடந்து தெளிக்கவும். |

குறுஞ்செய்தி-: மழை: செப் 30, அக் 1& 4: 6, 6& 3 மி.மீ. களைக்கொல்லி/எக்டர்- சோளம்- அட்ரசின் 500 கி (1 கி/லிட்டர்), பயறுவகை-பென்டிமெத்தலின் 2 லி, பருத்தி- பென்டிமெத்தலின் 3.3 லி.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி